<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 2/2022 | சாட்சியம் | **:** | **PW1** |
| **Name** | **:** | திரு.கங்காதரன் | | | |
| **Date** | **:** | **15.04.2026** | | | |
| **Time** | **:** | **1.20 p.m to 1.27 p.m** | | | |

<u>ம.த.சா.**1.**திரு.கங்காதரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். இரு எதிர்மனுதார் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை</u>

நான் பழையசிவரம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவராக உள்ளேன். நான் எந்த வருடத்தில் இருந்து வேலை பார்கிறேன் என்றால் 1994 ல் இருந்து பார்க்கிறேன். என்னுடைய முதல் மாத சம்பளம் ரூ.240/-. நான் கடைசியாக வாங்கிய மாத சம்பளம் ரூ.4240/-. நான் பணி ஓய்வு பெற்று 4 வருடம் ஆகிறது. எப்போது எல்லாம் ஊதியம் உயர்த்தப்பட்டது என்றால் நினைவில்லை. ரூ.4240/- எந்த மாதத்தில் இருந்து வாங்கி வருகிறேன் என்றால் 2016, 2017 இருந்து வாங்கி வருகிறேன். என்னை இந்த பணியில் யார் நியமனம் செய்தார்கள் என்றால் வாலாஜாபாத் BDO அவர்கள் நியமனம் செய்தார்கள். அப்பேது பஞ்சாயத்து தலைவராக யாரும் இல்லை. இரண்டு வருடங்கள் கழித்து தருமர் என்பவர் பஞ்சாயத்து

தலைவராக இருந்தபோது தொடர்ந்து பணி வழங்கி வந்தார். பணி நியமன உத்தரவு எதுவும் BDO வழங்கவில்லை. பணி நியமனம் சம்மந்தமாக தீர்மானம் இயற்றப்படவில்லை. பணி நியமனம் செய்யப்பட்டதில் இருந்து எனக்கு ஊதியம் பஞ்சாயத்து தான் வழங்கி வருகிறது என்றால் ஆமாம். முதலில் BDO அலுவலகம் வழங்கி வந்தது. நான் பணி ஓய்வு பெறும் வரை என்னுடைய மாத ஊதியம் பஞ்சாயத்தால் என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்றால் ஆமாம். ஆரம்பத்தில் இருந்து எனக்கு ஊதியம் மாதமாதம் வழங்கப்பட்டுகிறது என்றாலும் தினக்கூலி அடிப்படையில் வழங்கப்படவில்லை என்றாலும் ஆமாம். பஞ்சாயத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு தான் மாத ஊதியம் உயர்த்தப்பட்டது என்றால் இல்லை.அரசாணை படி உயர்த்தப்பட்டது. நான் ஊதியத்தை உயர்த்தி தர கேட்டு பஞ்சாயத்தில் மனு எதுவும் கொடுத்தது இல்லை. அவர்களாக தான் உயர்த்தி கொடுத்து வருகிறார்கள். அரசாணை முன்னிலைக்கு சம்பளத்தை உயர்த்தி தர வேண்டும் என பஞ்சாயத்தில் இது வரை மனு எதுவும் கொடுத்தது இல்லை. ஊரக உள்ளாட்சி சுகாதார பொது பணியாளர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன் என்றால் ஆமாம். எங்கள் சங்கத்தில் சொன்ன விவரத்தின் அடிப்படையில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் மாதமாதம் வாங்கி வரும் தொகையானது சம்பளமா, தொகுப்பூதியமா என தெரியாது. ம.சா.ஆ.**11** ஆவணத்தை ஊராட்சி மன்ற

தலைவர் வழங்கி உள்ளார் என்றால் ஆமாம். அந்த கடிதத்தில் சம்பளம் என்றோ, தொகுப்பூதியம் என்றோ சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். என் நியமனம் குறித்த சான்றிதழ் மட்டும் தான் வழங்கி உள்ளார்கள் என்றால் ஆமாம். நான் உள்ளாட்சி துறை அரசாணை அடிப்படையில் தான் பணி புரிவதால் நான் தொழிலாளர் துறை அரசாணையின் படி சம்பளம் உயர்த்தி கேட்க இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் அரசாணை எனக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. நான் தொகுப்பூதியமாக பெற்று வரும் காரணத்தினால் சம்பளமாக நிர்ணயித்து உயர்த்தி வழங்க அரசாணை பொருந்தாது என்றால் சரியல்ல. நான் உள்ளாட்சி துறை நிர்வாகத்தின் கீழ் பணி புரிவதால் தொழிலாளர் துறை நிர்வகாத்தின் கீழ் பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.04.15 19:08:59 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:15.04.2026.